பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 03 2024 **FRIDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பூட்டான் உடனான இந்தியாவின் நல்லுறவு தனித்துவம் வாய்ந்தது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கியது பிஜேபி அரசுதான் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும் பசுமை எரிபொருளுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

4. குடியுரிமை திருத்தச்சட்டம் உள்நாட்டு விவகாரம் என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் **Taekwondo** ஆசிய தகுதிச்சுற்றுப் போட்டி சீனாவின் தையானில் இன்று தொடங்கியது.

-- *இனி விரிவான செய்திகள்* -

**<<<<<<<>>>>>**

இந்தியாவும், பூட்டானும் நெருக்கமான மற்றும் தனித்துவம் வாய்ந்த நல்லுறவுகளை கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள பூட்டான் பிரதமர் திரு **'Dasho Tshering Tobgay '**, இன்று தில்லியில் குடியரசுத் தலைவரை சந்தித்து பேசினார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திருமதி திரௌபதி முர்மு, பரஸ்பர நம்பிக்கை அடிப்படையிலும், நல்லெண்ண புரிந்துணர்வு அடிப்படையிலும் இருநாடுகளுக்கும் இடையே நீடித்த உறவு தொடர்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பூட்டானுடன் பல்வேறு துறைகளில் மிக ஆழமான மதிப்புமிக்க நல்லுறவுகளை இந்தியா கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

பூட்டான் நாட்டின் முன்னுரிமைகள் மற்றும் விருப்பங்களுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிசக்தி ஒத்துழைப்பு, வளர்ச்சிப்பணிகள், மக்களிடையேயான உறவுகள், வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் புத்தமக ஆன்மிக பாரம்பரியத்தில் இணைந்து செயலாற்றுவதாக திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

கேரளாவில் ஐக்கிய ஜனநாயக முன்னணி மற்றும் இடதுசாரி ஜனநாயக முன்னணி ஆட்சியில் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டிருப்பதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பத்தனம்திட்டாவில் நடைபெற்ற பிஜேபி தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

மாநிலத்தில் இந்த இரண்டு முன்னணிகளின் ஆட்சியின்போதும் ஊழல் மற்றும் முறைகேடுகளால் மக்கள் நலத்திட்டங்கள் பாதிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

வரும் மக்களவைத் தேர்தலில், கேரளாவிலிருந்து பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றிபெறுவார்கள் என்று திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக, தமிழகத்தின் கன்னியாகுமரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பிரதமர், தமிழர்களின் நலனுக்கு எதிராக திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் செயல்படுவதாக குற்றம் சாட்டினார்.

திமுக – காங்கிரஸ் கூட்டணி அரசு மத்தியில் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானதாகவும், பிஜேபி தலைமையிலான மத்திய அரசு வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜல்லிக்கட்டுக்கான தடையை திமுக – காங்கிரஸ் கூட்டணி அரசுதான் கொண்டுவந்ததாகவும், பிஜேபி தலைமையிலான அரசுதான் அதனை நீக்கியதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

கேரள பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் தெலங்கானா புறப்பட்டு சென்றார்.

<<<<<<<>>>>>

நேரடி அந்நிய முதலீடு இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தனியார் தொலைக்காட்சி ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

சீர்திருத்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு மத்திய – மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு அவசியமாகிறது என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, ட்ரோன் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இந்தியா புதிய சாதனைகளை படைத்திருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய எத்தனால்-100 போன்ற பசுமை எரிபொருளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாற்று எரிபொருளான எத்தனால்-100-ஐ அறிமுகம் செய்துவைத்து அவர் பேசினார்.

**‘Gasoline** எரிபொருளுக்கு மாற்றாக 92 முதல் 94 சதவீதம் எத்தனால்-100 எரிபொருள் மோட்டார் வாகனங்களுக்கு உகந்ததாக அமையும் என்று அவர் கூறினார்.

மிக குறைவான புகையை வெளிப்படுத்துவதுடன், பருவநிலை மாற்றம் மற்றும் காற்று தரத்தை மேம்படுத்துவதில் உள்ள பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடியதாக இந்த எரிபொருள் இருக்கும் என்றும் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

கோவிட் பெருந்தொற்று காலத்தில் 50 சதவீத சம்பளத்தில் பணியாற்றிய தேசிய ஜவுளிக்கழக ஆலை ஊழியர்களுக்கான சம்பள நிலுவைத் தொகையை அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று விடுவித்தார்.

மும்பையில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், தேசிய ஜவுளிக்கழகம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட போதிலும், ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றியுள்ளதாக கூறினார்.

அந்த ஊழியர்களின் வீடுகளை மறுசீரமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விரைவில் அந்த பணிகள் நிறைவடையும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

அஞ்சல் துறையில் பணிபுரியும் 2 லட்சத்து 56 ஆயிரம் கிராமப்புற அஞ்சல் சேவகர்களுக்கான நிதி மேம்பாட்டுத்திட்டத்தை மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று தொடங்கிவைத்தார்.

கிராம அஞ்சல் சேவகர்களின் சேவையில் உள்ள தேக்கநிலையை போக்கவும், அவர்களின் சேவையை மேம்படுத்தவும் இந்த திட்டம் வழிவகுக்கும் என்று அஞ்சல் துறை அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணை நாளை பிற்பகல் மூன்று மணிக்கு வெளியிடப்படுகிறது.

புதுதில்லியில் நடைபெறவுள்ள செய்தியாளர் சந்திப்பில், தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தேர்தல் அட்டவணையை வெளியிடுகிறார்.

முன்னதாக, திரு ராஜீவ்குமார் இன்று புதிதாக பொறுப்பேற்றுக்கொண்ட தேர்தல் ஆணையர்கள் திரு **Gyanesh Kumar** மற்றும் **Sukhbir Singh Sandhu**-வுடன் இதுதொடர்பாக ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>

மின்சார வாகன கொள்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மின்சார வாகன உற்பத்தி முனையமாக இந்தியாவை உருவாக்கும் நோக்கில், இந்த கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகன உற்பத்தி நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கவும் இந்த கொள்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

குடியுரிமை திருத்தச்சட்டம் உள்நாட்டு விவகாரம் என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் திரு **Randhir Jaiswal** இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை கருத்து தெரிவித்திருப்பது தேவையற்றது என்று கூறினார்.

குடியுரிமை திருத்தச்சட்டம், குடியுரிமை வழங்குவதற்காகத்தான் என்றும் அவர் தெரிவித்தார்.

2014-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதிக்கு முன்னர், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தான் நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜெயின், பார்சி மற்றும் கிறிஸ்தவர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்கு இந்த சட்டம் வகை செய்கிறது என்றும் திரு **Jaiswal** கூறினார்.

<<<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் ரயில்வே 2 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது.

கடந்த நிதியாண்டின் இதேகாலத்துடன் ஒப்பிடுகையில், இது 17 ஆயிரம் கோடி ரூபாய் அதிகமாகும் என்று ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>

நாடுமுழுவதும் முதல்முறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு இயக்கம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்களிப்பை உறுதி செய்வதற்கு முனைப்பான பல நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் எடுத்து வருகிறது. தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முதல்முறை வாக்காளர்கள் வரும் தேர்தலில் வாக்களிக்க ஆர்வத்துடன் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

<<<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் 15 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

நாகையிலிருந்து விசைப்படகில் மீன்பிடிக்க சென்ற இவர்கள், திசை மாறி இலங்கை கடற்பகுதிக்கு சென்றதையடுத்து சிறைபிடிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்த மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து சென்ற இலங்கை கடற்படையினர் பின்னர் மயிலட்டி துறைமுகத்தில் அந்நாட்டு மீன்வளத்துறையினர் இடம் ஒப்படைத்தனர். அவர்களை யாழ்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இருப்பதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் **Taekwondo** ஆசிய தகுதிச்சுற்றுப் போட்டி சீனாவின் தையானில் இன்று தொடங்கியது.

இந்தியாவின் சார்பில் **Akshay, Aman, Margarette** மற்றும் **Sania** இதில் பங்கேற்றுள்ளனர்.

-------------------

ஸ்பெயின் பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Bhavina Patel – Sonalben Patel** இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்த இணை இப்பதக்கத்தை கைப்பற்றியது.

--------------------

உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்று ஆட்டத்தில் பங்கேற்பதற்கான இந்திய அணி, சவுதி அரேபியா புறப்பட்டு சென்றது.

<<<<<<<END>>>>>